தமிழ்நாடு அரசு

தொழில் நுட்பக் கல்வித்துறை, சென்னை 600 025.

வணிகவியல் பாடங்களில் அரசு தொழில் நுட்பத் தேர்வுகள் பிப்ரவரி 2018

**மறுமதிப்பீடு அறிவிக்கை**

2018 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அரசு தொழில் நுட்பக் கல்வி துறையினால் நடத்தப்படும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வுகளில் கலந்த கொண்ட அரசு அங்கீகாரம் பெற்ற தட்டச்சுப் பயிலகங்கள் மற்றும் தனித்தேர்வர்கள் மறுமதிப்பீட்டுக்கான தேர்வு தாள் நகல் (Xerox copy) பெறுவதற்கு இணையதளத்தில் **112.133.214.70** என்ற link - ல் Online மூலமாக விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

மறுமதிப்பீடுக்கான Online விண்ணப்பம், வங்கி வரைவோலை மற்றும் சுயமுகவரியிட்ட கவரினை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்பிக்க வேண்டும். மறுமதிப்பீடு தொடர்பான விவரங்களை தொழில் நுட்பக் கக்வி இயக்கக இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.tndte.gov.in).

**Tentative Schedule for Revaluation**

| S. No | | Date |
|---|---|---|
| 1. | Date of apply for Answer Paper Xerox Copy through online | **18.04.2018** |
| 2. | Last Date for apply for Answer Paper Xerox Copy through online | **24.04.2018** |
| 3. | Last Date for sending Printed online application form along with Demand Draft and Self Addressed cover to the DOTE | **02.05.2018** |
| 4. | Date of apply for Revaluation through online | **09.05.2018** |
| 5. | Last Date for apply for Revaluation through online | **15.05.2018** |
| 6. | Last Date for sending printed online application form for Revaluation along with Demand Draft to the DOTE. | **22.05.2018** |
| 7. | Tentative date for declaration of Revaluation result | **01.06.2018** |

மேற்குறிப்பிட்ட கடைசி நாளுக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அஞ்சல் போக்குவரத்தில் ஏற்படும் தவறுகள் மற்றும் காலதாமத்திற்கு இவ்வியக்ககம் பொறுப்பேற்காது.

**தலைவர்**
**தேர்வு வாரியம்**
**சென்னை – 600 025**

தொழில் நுட்பக் கல்வித்துறை, சென்னை 600 025.
அரசு தொழில் நுட்பத் தேர்வுகள் பிப்ரவரி 2018
வணிகவியல் பாடங்கள் – விடைத்தாள் நகல் கோரும் விண்ணப்பம்

<u>முக்கிய அறிவுரைகள்</u>

1. விண்ணப்பதாரர் தங்களது பெயர், பதிவு எண் மற்றும் பிறந்ததேதி ஆகியவற்றை தெளிவாக தாங்கள் ஏற்கனவே தேர்வின் போது விண்ணப்பம் செய்த விண்ணப்படிவத்தில் உள்ளது போன்று அல்லது சான்றிதழ்களில் உள்ளது போன்று பிழையின்றி குறிப்பிட வேண்டும்.
2. விடைத்தாள் நகல் கோரும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் அவர்களின் பாடபிரிவு மற்றும் அதன் நிலையை சரியாக குறிப்பிட வேண்டும். தவறான பாட பிரிவு மற்றும் நிலையை குறிப்பிடும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.
3. விடைத்தாள் நகல் கோரி இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இரண்டு அல்லது அதற்கு மேல் கூடுதலான பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது தனித்தனியாக ஒவ்வொரு பாடத்திற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
4. விடைத்தாள் கோரும் விண்ணப்பதாரர்கள் சுய முகவரியிட்ட கவரினை (26 c.m. x 11 c.m.) விடைத்தாள் நகல் அனுப்புவதற்காக விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பவேண்டும்.
5. விடைத்தாள் நகல் கோரும் விண்ணப்பதாரர்கள் பாடம் ஒன்றுக்கு ரூ.150/– வீதம் (i.e., for both first & second paper ) வரைவோலை எடுத்து அனுப்ப வேண்டும். Demand Draft drawn in favour of "Additional Director of Technical Education (Exam), payable at Chennai.
6. இணைய தளத்தின் மூலம் விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டும் மறுமதிப்பீட்டுக்காக விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவார்கள்.
7. மறுமதிப்பீட்டுக்கான அட்டவணை மற்றும் தேர்வு முடிவுகள் தொடர்பான விவரங்கள் இயக்கக இணைய தளத்தில் வெளியிடப்படும் (www.tndte.gov.in/site)
8. வரைவோலையின் பின்புறம் விண்ணப்பதாரின் பெயர், பதிவு எண் மற்றும் பிறந்த தேதி குறிப்பிட வேண்டும்.
9. இணையதளத்தின் மூலம் விண்ணப்பித்த விண்ணப்பத்துடன் வரைவோலை மற்றும் சுய முகவரியிட்ட கவரினை தலைவர், தேர்வு வாரியம், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், கிண்டி, சென்னை – 25 என்ற முகவரிக்கு அனுப்பவும். அல்லது நேரடியாக வந்து இயக்ககத்திற்கு சமர்பிக்கவும்.
10. கடைசி நாளுக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அஞ்சல் போக்குவரத்தில் ஏற்படும் தவறுகள் மற்றும் காலதாமதத்திற்கு இயக்ககம் பொறுப்பேற்காது.
11. விண்ணபதாரர்கள் இயக்ககத்திற்கு அனுப்பும் கவரின் மேல் "வணிகவியல் தேர்வு பிப்ரவரி 2018 விடைத்தாள் நகல் கோரும் விண்ணப்பம்" என்று குறிப்பிட வேண்டும்.

தலைவர்
தேர்வு வாரியம்
சென்னை – 600 025

GOVERNMENT OF TAMILNADU

DIRECTORATE OF TECHNICAL EDUCATION, CHENNAI – 600 025.

GOVERNMENT TECHNICAL EXAMINATIONS IN COMMERCE SUBJECTS - FEBRUARY 2018

## REVALUATION - NOTIFICATION

The Candidates who apply for Government Technical Examination February 2018 (Typewriting, Shorthand and Accountancy) from the Government approved Commerce (Typewriting) Institute and Private candidate can apply the Answer Paper Xerox Copy for Revaluation through online from the link 112.133.214.70

The Printed copy of online application form together with Demand Draft and self addressed envelope must be submitted either in person or by post. All the details and instruction for filling online application, fees etc., can be downloaded from the DOTE website (www.tndte.gov.in)

### Tentative Schedule for Revaluation

| S. No | | Date |
|---|---|---|
| 1. | Date of apply for Answer Paper Xerox Copy through online | **18.04.2018** |
| 2. | Last Date for apply for Answer Paper Xerox Copy through online | **24.04.2018** |
| 3. | Last Date for sending Printed online application form along with Demand Draft and Self Addressed cover to the DOTE | **02.05.2018** |
| 4. | Date of apply for Revaluation through online | **09.05.2018** |
| 5. | Last Date for apply for Revaluation through online | **15.05.2018** |
| 6. | Last Date for sending printed online application form for Revaluation along with Demand Draft to the DOTE. | **22.05.2018** |
| 7. | Tentative date for declaration of Revaluation result | **01.06.2018** |

The receipt of online application after the last date will be summarily rejected. This Directorate is not responsible for any delay of receipt of application sent by mail (Post).

Chairman
Board of Examination
Chennai - 600 025.

## APPLICATION FORM FOR APPLYING ANSWER PAPER XEROX COPY FOR GOVERNMENT TECHNICAL EXAMINATION IN COMMERCE SUBJECTS FEBRUARY-2018

PREREQUISITE : Before proceeding for filling the Online Application form for the receipt of Answer Paper Xerox copy. the applicant is required to have the following 1) Copy of Hall Ticket or Copy of the Examination Application Form already submitted to DOTE. This is required for validation and future correspondence. In case you provide wrong/incorrect Register Number and Date of Birth, you will not be able to apply through online. 2) A demand draft for Rs.150/-per subject.

### IMPORTANT INSTRUCTIONS FOR FILLING ONLINE APPLICATION

1. While submitting application through online, the candidates should furnish their correct name, register number and date of birth as in the original examination application form or in the educational qualification certificate.
2. The candidates should clearly mention the subject and grade for which they apply for the xerox copy. Further, if the candidate wrongly enters the subject and grade, the application will not be entertained.
3. If the candidates require copy of answer paper for two or more subjects, they have to apply through online separately for each subject.
4. The candidate should send self addressed envelope (26 c.m. x 11 c.m.) along with the printed copy of the online application for sending the copy of the answer paper.
5. Candidate has to pay Rs. 150/- as fee per subject (for both first & second paper) for sending the Xerox copy of answer paper. The amount should be sent in the form of Demand Draft drawn in favour of "Additional Director of Technical Education (Exam) payable at Chennai."
6. The candidates, who apply for Xerox copy of answer paper, are alone eligible for applying for revaluation through online.
7. The schedule of revaluation and declaration of result will be available in the DOTE website. (www.tndte.gov.in/site)
8. The name, register number and date of birth of the candidate should be mentioned on the reverse side of the Demand Draft.
9. The printed copy of the online application form together with demand draft and self addressed envelope must be sent by to " The Chairman, Board of Examinations, Directorate of Technical Education, Guindy, Chennai 600 025. However, the candidates may also handover the same at the Directorate of Technical Education in person.
10. The application received after the due date will be summarily rejected. The Directorate of Technical Education will not be held responsible for the delayed receipt of application received by post.
11. Candidate should write " Application for Answer Paper Xerox Copy for GTE February – 2018" on the envelope.

Chairman
Board of Examination
Chennai - 600 025.

## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் – வணிகவியல் தேர்வுகள் (தட்டச்சு ஆங்கிலம் / தமிழ், சுருக்கெழுத்து ஆங்கிலம்/தமிழ் மற்றும் கணக்கியல்) – மறுமதிப்பீடு மற்றும் விடைத்தாள் நகல் வழங்குதல் – கட்டணம் நிர்ணயித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (பி1) துறை

அரசாணை (நிலை) எண்.307 நாள்:27.10.2017.

ஹேவிளம்பி வருடம், ஐப்பசி 10 ,
திருவள்ளுவர் ஆண்டு 2048.

படிக்கப்பட்டவை :–

1. அரசாணை (நிலை) எண்.244, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 31.07.2001.
2. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.112626/க்யூ1/2009, நாள் 19.01.2015 மற்றும் 08.05.2017.

---------

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தொழில்நுட்பக் கல்வி ஆணையர், தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்து பாலிடெக்னிக் கல்லூரிகளில் வருடத்திற்கு இரண்டு முறை (ஏப்ரல் மற்றும் அக்டோபர்) நடைபெறும் பட்டயத்தேர்வில், தேர்ச்சி பெறாத மாணவர்கள் மறுமதிப்பீடு செய்ய விண்ணப்பிக்கும்போது, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி மறுமதிப்பீட்டிற்கான கட்டணமாக ரூ.400/–ம், விடைத்தாள் நகல் வழங்குவதற்கு கட்டணமாக ரூ.100/–ம் வசூல் செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

2. தொழில்நுட்பக் கல்வி ஆணையர் மேலும் தனது கடிதத்தில், பட்டயத்தேர்வுகளில் உள்ளதைபோன்று வணிகவியல் தேர்வுகளுக்கு (தட்டச்சு ஆங்கிலம் / தமிழ், சுருக்கெழுத்து ஆங்கிலம்/தமிழ் மற்றும் கணக்கியல்) மறுமதிப்பீடு மற்றும் விடைத்தாள் நகல் வழங்க அனுமதி இல்லாத நிலையில், வணிகவியல் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் தற்போது நடைமுறையில் உள்ள மறுகூட்டல் (Retotalling) செய்ய விண்ணப்பித்து வருகிறார்கள் என்று தெரிவித்துள்ளதுடன், தட்டச்சு, சுருக்கெழுத்து பாடங்களை பயிற்றுவித்து வரும் சுமார் 3000 பயிலகங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட சங்கம், அரசு தொழில் நுட்ப தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவர்களின் விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்ய வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை அளித்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டு, பட்டயத்தேர்வுகளில் உள்ளதைபோன்று, வணிகவியல் தேர்வுகளுக்கும் (தட்டச்சு ஆங்கிலம் / தமிழ், சுருக்கெழுத்து ஆங்கிலம்/தமிழ் மற்றும் கணக்கியல்) மறுமதிப்பீடு செய்வதற்கு ரூ.400/ரூ.500–ம், விடைத்தாள் நகல் வழங்குவதற்கு ரூ.150/–ம் மாணவர்களிடம் வசூல் செய்ய அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

...2

3. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, பட்டயத்தேர்வுகளில் உள்ளதைப் போன்று, வணிகவியல் தேர்வுகளுக்கும் தட்டச்சு ஆங்கிலம்/தமிழ் விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்வதற்கு ரூ.400/-ம், சுருக்கெழுத்து ஆங்கிலம்/தமிழ் மற்றும் கணக்கியல் விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்வதற்கு ரூ.500-ம், மேலும், விடைத்தாள் நகல் வழங்குவதற்கு ரூ.150/-ம் வசூல் செய்ய தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.51067/கல்வி-1/2017, நாள் 16.10.2017-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனில் பாலிவால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர் :-
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை-25.
மாநில கணக்காயர், சென்னை-18.
✓சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.
நகல் :-
மாண்புமிகு அமைச்சர் (உயர்கல்வி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிகல்வித்துறை, சென்னை-9.
நிதி (கல்வி-1) துறை, சென்னை-9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.

27.10.17

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை 600 025.

மேற்குறிப்பு எண் 112626 / க்யூ1 / 2009, நாள்: 16.04.2018
அரசாணையின் நகல் தகவலுக்காக அனுப்பலாகிறது

ஒம்/- xxx
தேர்வு வாரியத் தலைவர்

பெறுநர்
அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தட்டச்சு / வணிகவியல் பயிலக உரிமையாளர்கள்

நகல் : கண்காணிப்பாளர்
'க்யூ' 'ஆர்' & 'ட்டி' பிரிவுகள்

உயர்கல்வித் (பி1) துறை
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

கடித எண்.21282/பி1/2017– 3 , நாள் 12.04.2018.

அனுப்புநர்
திரு. சுனில் பாலீவால், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை–25.

ஐயா,

பொருள்: தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் – வணிகவியல் தேர்வுகள் – விடைத்தாள் மறுமதிப்பீட்டு பணி தொடர்பாக கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் – அனுமதி – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.244, உயர்கல்வித் (பி1) துறை, நாள் 31.07.2001 மற்றும் அரசு கடித எண்.8860/பி1/2002–1, நாள் 09.07.2002.
2. அரசாணை (நிலை) எண்.307, உயர்கல்வித் (பி1) துறை, நாள்27.10.2017.
3. தொழில்நுட்ப கல்வி ஆணையரின் கடித எண்.112626/க்யூ1/2009, நாள் 06.12.2017 மற்றும் 11.01.2018.
4. அரசு கடித எண்.21282/பி1/2017–2, நாள் 15.03.2018.
5. தொழில்நுட்ப கல்வி இயக்குநரின் கடித எண்.112626/க்யூ1/2009, நாள் 21.03.2018.

--------

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் கடிதங்கள் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. பார்வை ஐந்தில் காணும் கடிதத்தில் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், பிப்ரவரி 2018–ல் வணிகவியல் தேர்வுகள் நடைபெற்று முடிவுற்ற நிலையில், விடைத்தாள் மதிப்பீட்டு பணி நடைபெற்று வருகிறது என்று குறிப்பிட்டு, தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின், விடைத்தாள் மறுமதிப்பீட்டு பணியில் கடைபிடிக்கப்பட வேண்டிய கீழ்காணும் நடைமுறைகள் குறித்து அரசின் ஒப்புதலை கோரியுள்ளார்:–

<u>விடைத்தாள் நகல் வழங்குவதற்கு :</u>

i) விடைத்தாள் நகல் பெறுவதற்கு மற்றும் மறுமதிப்பீடு செய்வதற்கு பார்வை 2ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள தொகையை Demand Draft ( Draw in favour of Additional Director of Technical Education (Exam) payable at Chennai) எடுத்து அனுப்பப்பட வேண்டும்.

ii) தேர்வு முடிவுகள் வெளிவந்த 7 நாட்களுக்குள் Online மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.

iii) விடைத்தாள் நகல் சம்பந்தப்பட்ட மாணவருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

<u>மறுமதிப்பீடு கோருவதற்கு:</u>

i) மறுமதிப்பீட்டுக்காக அறிவிக்கையில் (Notification) வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் Online மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.

ii) விடைத்தாள் மறுமதிப்பீடு பணி உரிய வணிகவியல் பாடங்களில் அனுபவமுள்ள தேர்வாளர்களால் இயக்ககத்தில் நடத்தப்படும்.

iii) முதல் மதிப்பீட்டில் மதிப்பீட்டாளர்கள் வழங்கிய மதிப்பெண்களில் பத்து மதிப்பெண்களுக்கு மேல் வித்தியாசம் ஏற்பட்டால், இரண்டாவது மறுமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

2. மேற்காணும் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்பட்டு, அவ்வாறே மேலே பத்தி 1—ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்குத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

மு. [signature] 12.4.18

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்

இருப்பு கோப்பு / உதிரி

தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை 600 025.

<u>மேற்குறிப்பு எண் 112626 / க்யூ1 / 2009, நாள்: 16.04.2018</u>

அரசு கடித நகல் தகவலுக்காக அனுப்பலாகிறது

ஒம்/— xxx

தேர்வு வாரியத் தலைவர்

பெறுநர்

அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தட்டச்சு / வணிகவியல் பயிலக உரிமையாளர்கள்

நகல் : கண்காணிப்பாளர்

‘க்யூ’ ‘ஆர்’ & ‘ட்டி’ பிரிவுகள்